DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT,
RAMANATHAPURAM

**CC.No. 115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 16th day of November 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 6** | கிராமம் | : | தேவிபட்டினம் |
| பெயர் | : | பாக்கீயஸ்வரி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | செல்வராஜ் | சமயம் | : | இந்து |
| வயது | : | 40 | ஜாதி | : | பறையர் |
| தொழில் | : | கூலிவேலை | | | |

நாள்: 16.11.2023
நேரம்: 01.10 பி.ப

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1 உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசுதரப்பு கு.வி.

கடந்த 06.04.2021ம் தேதி இரவு 9 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பாக எதிரிகள் உட்கார்ந்து கொண்டு அரசியல் பேசியபோது அ.சா.1 இங்கு

பேசக்கூடாது என்று சொன்னதால் அதற்கு 1ம் எதிரி அங்கு நின்று கொண்டு அசிங்கமாக பேசி, கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதை விலக்க சென்ற அ.சா.1ன் கணவரை எதிரிகள் சட்டையை பிடித்து இழுத்து கையால் அடித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 கணவரை அடிக்கிறார் என்று ஓடி விலக்கும்போது 1ம் எதிரி கழுத்தை பிடித்துக்கொண்டு அ.சா.1 ஐ வலது பக்க கன்னத்தில் ஓங்கி அடித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்பு அருகில் இருந்த நானும், அஞ்சலையும் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றால் நான் அப்போது அங்கு இல்லை. எதிரிகள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.11.16 19:24:50 +0530